PON VIDYASHRAM GROUP OF SENIOR SECONDARY SCHOOLS

## Class – IV Tamil October month notes

**1. திருக்குறள் கதைகள் (செய்யுள்)**

**2- பசுவுக்குக் கிடைத்த நீதி (உரைநடை)**

**3. இணைப்புச் சொற்கள் (இலக்கணம்)**

**4. வேலைக் கேற்ற கூலி ( non testing ) ( துணைப்பாடம் )**

### 1. திருக்குறள் கதைகள் (செய்யுள்)

**1. பொறையுடைமை எப்போது போற்றப்படும்?**

நிறை உடையவராக இருக்கும் தன்மை தம்மைவிட்டு நீங்காமலிருக்க வேண்டுமானால் பொறுமையைப் போற்றி ஒழும் வேண்டும். அப்போது பொறையுடைமை போற்றப்படும்.

**2. மெய்ப்பொருள் காண்பதே அறிவு என வள்ளுவர் கூறக் காரணம் என்ன?**

எப்பொருளை யார் யாரிடம் கேட்டாலும் கேட்டவாறே, எடுத்துக் கொள்ளாமல் அப்பொருளின் மெய்யான பொருளைக் காண்பதே அறிவு என வள்ளுவர் கூறுகிறார்

**3. நாவைக் காக்காவிடில் ஏற்படும் துன்பம் என்ன?**

நாவைக் காக்கத் தவறினால் சொற் குற்றத்தில் அகப்பட்டுத் துன்புறுவர்.

**4. சினம் எப்போது ஒருவரை அழிக்கும் ?**

ஒருவன் தன்னைத்தானே காக்க விரும்பினால் சினம் வராமல் காத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு காத்துக் கொள்ளாவிட்டால், சினம் தன்னையே அழித்துவிடும்.

**5. நீங்கள் படித்த திருக்குறன் கதைகளுள் உங்களுக்குப் பிடித்த கதை எது? ஏன்?**

எனக்கும் பிடித்த கதை “பொறுமையும் பொறுப்பும்” இக்கதை மூலம் . பொறுமையின் சிறப்பை உணர முடிகிறது. எடிசன் தன் பணியாளரிடம் பொறுமையாக செயல்பட்டு, பணியாளருக்குப் பொறுப்பாக இருப்பதன் அவசியத்தை உணர்த்தியுள்ளார். அதனால் இக்கதை எனக்குப் பிடிக்கும்.

### 2. பசுவுக்குக் கிடைத்த நீதி(உரைநடை)

**வினா விடை**

**1. மனுநீதிச் சோழன் ஆராய்ச்சி மணியை அமைத்ததற்கான காரணம் என்ன?**

மனுநீதிச் சோழன் தனது ஆட்சியில் குடிமக்கள் யாரும் துன்பப்படக் கூடாது என்று நினைத்தான். அதனால் ஆராய்ச்சி மணியை அமைத்தான்.

**2. பசு ஆராய்ச்சி மணியை அடித்தது ஏன் ?**

அரசனின் மகன் தேரைத் தெருவில் ஓட்டிச் செல்லும் போது, அங்குத் துள்ளிக் குதித்துக் கொண்டிருந்த பசுவின் கன்று எதிர்பாராத வகையில் தேர்க்காலில் மாட்டி இறந்துவிட்டது. அதனால் துயருற்ற பசு ஆராய்ச்சி மணியை அடித்தது.

**3. பசுவின் துயரை மன்னன் எவ்வாறு போக்கினான்?**

பசுவின் துயரைப் போக்க எண்ணிய மன்னன், தன் மகனை அதே தேர்க்காலில் இட்டுக் கொன்று பசுவின் துயரைப் போக்கினான்.

## இணைப்புச் சொற்கள் ( இலக்கணம்)

நிரப்புக:

1. இரண்டு தொடர்களை இணைக்கப் பயன்படும் சொற்கள் இணைப்புச் சொற்கள் எனப்படும்.

2. இணைப்புச் சொற்கள் சில: அதனால், ஆகவே, ஆதலால், எனவே, எனினும்.